செ.வெ.எண்: 39 நாள்: 29.05.2020

# கால்நடை பராமரிப்புத்துறை

## பத்திரிக்கைச் செய்தி

தேசிய கால்நடை இயக்கம் திட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்தில் 2019–20–ம் ஆண்டில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் 2100 கால்நடைகளுக்கு மானியத்துடன் காப்பீடு மேற்கொள்ள இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் காப்பீடு மேற்கொள்ள வறுமைகோட்டிற்கு கீழுள்ள கால்நடை வளர்ப்போருக்கு 70 சதவீத மானியமும், வறுமை கோட்டிற்கு மேலுள்ள கால்நடை வளர்ப்போருக்கு 50 சதவீத மானியமும் வழங்கப்படும்.

இரண்டரை ஆண்டு முதல் 8 ஆண்டு வயதுள்ள கறவை மாடுகள், எருமை மாடுகள் மற்றும் 1 ஆண்டு முதல் 3 ஆண்டு வயதுள்ள வெள்ளாடுகள், செம்மறியாடுகளுக்கு இத்திட்டத்தில் காப்பீடு செய்யப்படும். அதிகபட்சமாக ரூ.35,000/– மதிப்புள்ள கால்நடைகளுக்கு காப்பீடு செய்ய மானியம் வழங்கப்படும். ஓராண்டு காப்பீட்டு கட்டணமாக கால்நடையின் மதிப்பில் 2 சதவீதமும், மூன்றாண்டு காப்பீட்டு கட்டணமாக, அதிகபட்சமாக கால்நடையின் மதிப்பில் 5 சதவீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரூ.35000/– க்கு மேல் காப்பீடு செய்ப்படும் கால்நடைகளுக்கு அதிகப்படியான மதிப்பிற்கான காப்பீட்டு கட்டணத்தை கால்நடை உரிமையாளரே செலுத்த வேண்டும்.

ஒரு குடும்பத்திற்கு அதிக பட்சமாக 5 கால்நடைகளுக்கு இத்திட்டத்தில் காப்பீடு செய்யலாம். எனவே கால்நடை வளர்ப்போர் அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அணுகி பயன்பெறலாம் என கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.